"DINAMANI"

PAGE NO: 04 DATE: 24.12.2021

கடல்சார் ஆராய்ச்சி மேம்பாடு

# பெங்களூரு நிறுவனத்துடன் புதுவை பல்கலை. ஒப்பந்தம்



புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத்சிங் முன்னிலையில், புரிந்துணர்வு ஒப்பந்தங்களைப் பரிமாறிக் கொண்ட பேராசிரியர் சைலேஷ் நாயக், பெங்களூரு தேசிய மேம்பட்ட ஆய்வுகள் நிறுவன இயக்குநர் அமரேஷ் சமந்தராயா.

**புதுச்சேரி, டிச. 23:** புதுவை பல்கலைக்கழகம் கடல்சார் ஆராய்ச்சி மேம்பாட்டுக்காக, பெங்களூரு தேசிய மேம்பட்ட ஆய்வுகள் நிறுவனத்துடன் (என்.ஐ.ஏ.எஸ்.) புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது.

புதுவை பல்கலைக்கழகத்தில் புதன்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், துணைவேந்தர் குர்மீத் சிங் முன்னிலையில், பேராசிரியர் சைலேஷ் நாயக், பெங்களூரு தேசிய மேம்பட்ட ஆய்வுகள் நிறுவனத்தின் இயக்குநர், பதிவாளர் அமரேஷ் சமந்தராயா ஆகியோர் கையெழுத்திட்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை பரிமாறிக் கொண்டனர்.

பல்கலைக்கழக நிதி அதிகாரி லாசர், சர்வதேச உறவுகள் பிரிவு டீன் ஏ.சுப்ரமணியம் ராஜு, என்.ஐ.எ.எஸ். குளோபல் பாலிடிக்ஸ் புல முதல்வர் சு.பாலசந்திரன் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இதைத்தொடர்ந்து, 2021-ஆம் ஆண்டில் உலக அரசியலின் நிலை குறித்த பயிலரங்கு நடைபெற்றது.

இதில்சீனா-தைவான்பிரச்னை, அமெரிக்கா, ரஷியா ஆகியவற்றின் ஈடுபாடுகள், பாரம்பரியமற்ற பாதுகாப்பு என பல தலைப்புகள் விவாதிக்கப்பட்டன.